# மொழி என்னும் ஜன்னலைத் திறந்தால்............

அன்பர்களே!

பிறந்தது முதல் ஆறு வயதுக் குழந்தைக்கு அடுத்த முக்கியமான தேவை,மொழி வளர்ச்சியே ஆகும்.உலகில் மனித இனம் ஒன்றிற்கே மொழியறிவை வெளிப்படையாக வைத்தார் கடவுள்.மனித நாகரிகத்தின் வளர்ச்சியும் மேன்மையும் அவன் பேசும் மொழியினை அடிப்படையாகக் கொண்டே அளவிடப்படுகிறது.

மொழியின் வளர்ச்சி என்பது குழந்தையின் மனவளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கையினைக் குறிப்பது ஆகும்.பிறந்த குழந்தை கருவான நாள் முதலே தாய் மூலம் மொழியறிவினைப் பெறுகிறது.தாயானவள் பேசும் மொழி மெதுவாகக் கருவில் பதிகிறது.எனவே கர்ப்ப காலத்தில் பெண்கள் பல மொழி அறிவைப் பிள்ளைகளுக்கு ஊட்டலாம்.

மேலும் மாண்டிசொரி,ஒரு குழந்தைக்குத் தாய்மொழி மிகவும் முக்கியம் என்கிறார்.ஆனால் தாயானவள் தன் மொழியைப் பேசாவிட்டால் குழந்தைக்குத் தாய்மொழியே தெரியாமல் போய்விடுவதை மாநகரங்களிலும் ,வெளிநாட்டு இந்தியக்குடும்பங்களிலும் காணலாம்.இதன் விளைவு?மனிதனால் தன் இனத்துடன் ,தன் குடும்ப மக்களுடன்,ஊருடன் சேர முடிவதில்லை.

மாண்டிசொரி தன் பள்ளிகளில் பல மொழியறிவை தரச் சொல்கிறார்,ஆனால் தாய்மொழி மிகவும் அவசியம் என்கிறார்.இக்கருத்தை நம் நாட்டுப் பணக்கார ஆங்கிலப் பள்ளிகளும்,பெற்றோர்களும் சிந்திக்க வேண்டும்.மேலும் மாண்டிசொரி, குழந்தைகள் எட்டு மொழிகள் அறிய வல்லவர்கள் என்கிறார்.ஆனால் அவை அனைத்தும் முறைப்படி அவர்கள் வாழும் சூழலில் புழக்கத்தில் இருக்க வேண்டும்.

ஆங்கில அறிவு இன்று மிக மிக அவசியம்.இதைத் தவிர்க்க இயலாது.ஆங்கில அறிவு வேண்டித்தானே பெற்றோர்கள் பாடுபட்டுப் பணம் சம்பாதித்துப் படிக்க வைக்கிறார்கள்?எல்லாப் பெற்றோர்களும் அதில் பலன் கண்டுவிடுகிறார்களா?இல்லை,ஏன்?

எந்த ஒரு மொழியும் நமக்கே புதிது தான்.நமக்கு வேறு மாநிலத்திற்கு மாற்றல் ஆகி விட்டால் நாம் தயங்கும் முதல் காரணம் மொழி தானே?ஆனால் அங்கே வேறுவழியில்லாமல் சென்று பலகாலம் வாழ்ந்தாலும் சிலருக்கு மொழி பரிச்சயம் ஆவதில்லை.காரணம்,அவர்கள் சென்ற இடத்திலும்
அம்மொழியினை விட்டு விலகியே இருக்கிறார்கள்.ஏழு ஆண்டுகள் சென்னையில் வசிக்கும் என் வங்காளத் தோழர் ஒருவருக்கு இன்று வரைத் தமிழ் தெரியாது.பெரியவர்களாகிய நமக்கே இந்த நிலை என்றால் ,பிள்ளைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆங்கில மீடியத்தில் படித்தாலும்,சதா ஆங்கிலம் புழங்கும் சூழலில் இருந்தால் தான் ஆங்கிலம் வரும்.குறிப்பாக ஆசிரியர்கள்,பெற்றோர்கள் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்.இவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் மாண்டிசொரி இயற்கையாக மொழி கற்கும் முறையை வடிவமைத்தார்.இக்கட்டுரையில் நான் தரும் செய்திகள் மிகவும் அடிப்படை ஆனவை.மிகவும் ஆழமான செய்திகளுக்கு மாண்டிசொரியின் நூல்களைக் காணுங்கள்.

க. ஆசிரியர்கள் பேசும் மொழியே குழந்தையின் காதுகள் வழியே மூளைக்குள் பதிந்து மெதுவாகப் பரிச்சயம் ஆகிறது.

உ. பின்னர் மெதுவாகப் பல பொருள்களின்,வினைகளின் பெயர்களை உபயோகிக்கவும்.வகுப்பறையே மொழிப் புத்தகம்.மொழியை ஆசிரியர்கள் அழகாக,மெதுவாக,உணர்ச்சியுடன் பேசவும்.

ங. பின்னர் பாடல்கள்,கதைகள்,நாடகங்கள் எனப் பல வகையில் மொழி அறிமுகம் தொடரட்டும்.தயவு செய்து உடனே எதையும் பிள்ளை கூற வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.

ச.பின்னர் சேண்ட் பேப்பர் லெட்டர்[உப்புத் தாளில் வடிவமைக்கப் பட்ட எழுத்துகள்] மூலம் பென்சில் பிடிக்கும் ஆள்காட்டி மற்றும் நடுவிரல்களை எழுத்தின் மீது ட்ரேஸ் செய்யவும்.அப்போது காகிததின் சொரசொரப்புத் தன்மை மூளையின் எழுத்தின் வடிவத்தினை அச்சேற்றிவிடும்.விரைவில் பிள்ளை பென்சிலைத் தூக்கிவிடுவான்.பழங்கால மணல்,நெல் மீது எழுதும் முறையை இது ஒத்தது.

ரு.பின்னர் வார்த்தைகளை எழுத்துக்கூட்டிப் படிப்பர்.

சு. அந்த வார்த்தைகளை சிறு சிறு மர எழுத்து வடிவங்கள் [மூவபிள் ஏல்ஃபபெட்ஸ்] மூலம் உருவாக்குவர்.உடனே ” இது தப்பு,சரியாக அமை” என்று கூறவேண்டாம்.

எ.பின்னர் பல வாக்கியங்கள்,சிறு செய்திகள்,சிறு கதைகள் எனப் படிப்படியாகப் படித்து முன்னேறுவர்.

அ.ஒவ்வொரு நிலையில்ய்ம் குழந்தையை நன்கு உற்சாகம் செய்யுங்கள்.பொறுமை மிகவும் அவசியம்.

கூ.எழுத்துக்களை வெறும் சத்தத்தை வைத்து அடையாளம் காண இயலாத பிள்ளைகளுக்கு,படங்கள் மூலம் சத்தத்தை தெரிவிக்கலாம்.

க0.கடைசியில் தான் நோட்டில் எழுதும் பயிற்சி வரும்.எடுத்த உடனே கையெழுத்தைப் பற்றிக் குறை கூற வேண்டாம்.

கக.சில எழுத்துக்களை அறிவதில் ஏன் பிள்ளை கஷ்டப்படுகிறது என்று ஆராய்ந்து வேறு வழி கண்டுபிடிக்க வேண்டும்.

கஉ.பலவிதப் படங்கள்,உரையாடலை வரவழைக்கும் படங்கள்,வினைச்சொல் விளையாட்டு[ஒரு வினையைச் சொல்லி,அதைச் செய்வது],பெயர்ச்சொல்பெட்டி[பல சாமானங்கள் உள்ள பெட்டி]ஒவ்வொரு பொருளையும் வெளியே எடுத்துப் பெயரை அறிதல் போன்ற பல வகைச் செயல்களால் மொழியைப் பரிச்சயம் செய்ய வேண்டும்.

கங.மாண்டிசொரிப் பள்ளியில் ஒவ்வொரு பொருளும் அறிவியலையும்,மொழியையும்,கணிதத்தினையும் கற்றுத்தருகிறது.

கச.பல நல்ல படங்கள் உள்ள சிறு சிறு வாக்கியங்கள் உள்ள புத்தகங்களை அறிமுகம் செய்யவும்.பிள்ளைகளை அவற்றை எடுத்துக் கையாள அனுமதிக்கவும்.

கரு.உடனே அதைப் பற்றி வினவ வேண்டாம்.,சொல்லவும் மாட்டார்கள்.

கசு. கதைகளை நீங்கள் கூறுங்கள்,படியுங்கள்.

உதாரணம்:ஈரோடு கிராமியப் பள்ளியில் முதல் மூன்று நாட்கள் பிள்ளைகள் ஆங்கிலப் பாடல்கள் கற்பிக்கும் போது,எதுவுமே பாடவில்லை.அவர்கள் வெறுமனே கவனித்தனர்.பின்னர் சற்று வாயால் ஏதேதோ சத்தம் செய்தனர்,இன்று இரண்டு மாதங்களில் அழகாகப் பாடுகின்றனர்,மெதுவாக வார்த்தைகளைப் பேசுகின்றனர்.காரணம்,இரு ஆசிரியர்களும் சதா ஆங்கிலத்தில் பேசிவருகின்றனர்.

கஎ.பல மொழி அறிவையும் பிள்ளைகளுக்குத் தரலாம்.

உதாரணம்:படங்களின் பெயர்களை நான் தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் கூறுவேன்.

கஅ.விதவிதமான வண்ணங்களில் பிள்ளைகள் எழுதலாம்.

ககூ. பல வகையான அழகான கையெழுத்து வடிவங்கள்,போஸ்ட்டர்களை வகுப்பில் வைக்கவும்.

உ0.பெயர்ச்சொற்களும்,வினைச்சொற்களுமே மிகவும் முக்கியமான இடத்தினை வகிக்கின்றன.

உக.பின்னர் உரிச்சொற்களை அறிமுகம் செய்யலாம்.

உஉ.அதிகப் பரிச்சயமான பொருள்களைக் கொண்டே முதலில் எழுத்துக்களின் சத்தங்களை அறிமுகம் செய்யவும்.

உ௩. பெயர்ச்சொற்களைக் கற்றுத் தரும் படங்கள் பெரும்பாலும் ஒரிஜினல் ஆகவே இருத்தல் வேண்டும்.

உச.பறவைகளின் பெயர்களும் மொழியறிவே.மொழி என்பது மிகப்பெரிய ஜன்னல்.அதை நாம் முறையே பிள்ளைகளுக்குத் திறக்கக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் அனைத்துப் பாடப்பிரிவுகளையும் தாங்களாகவே அறிவதை நான் கண்கூடாகப் பார்த்து அனுபவிக்கிறேன்.

உடு.எந்தக் கதைகளும்,பாடல்களும் வெறுமனே விளையாட்டுப் போக்குக்காக அல்ல.ஏதாவது ஒரு கருத்தை அடித்தளமாக வைத்து, ஆசிரியர்களே பாடல்களையும் கதைகளையும் எழுதவும்.

குழந்தைகள் நாளைய சமுதாயத்தின் ஆதாரத் தூண்கள்.அவர்களை நல்லவர்களாகவும் அறிஞர்களாகவும் ஆன்மீக உணர்வுடன் கூடிய மாமனிதனாகவும் உருவாக்க ,மாண்டிசொரிவழியில் நாம் பாடுபடுவோம்!

ஜெய் ஹிந்த்!!! ஓம் சாந்தி சாந்தி சாந்திஹி!!!

*மாண்டிசொரியின் கணக்குப் பாடத்திட்டம் பின்னர் எழுதப்படும்.